## அரசின் இறைத் தொழிற்பாடுகள்[1]

1980இல் அரசின் இறைத் தொழிற்பாடுகள் பொருளாதாரத்தில் மிக உயர்ந்த மட்டத்திலான மொத்தக் கேள்வியை அதிகரித்தது, ஒருபுறம், பண நிரம்பலின் வளர்ச்சியிலும், விலைமட்டத்திலும் மறுபுறம் செலாவணி வீதத்திலும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் நிலையிலும் மிகவும் தாக்கமான விளைவுகளை ஏற்படுத்தின. உள்ளார்ந்த இறை ஒழுங்குகள் மூலம் உறுதியான இறைக்கொள்கையைப் பின்பற்றத் தவறியமையின் விளைவாகவே இவ் அபிவிருத்திகள் பெருமளவிற்கு ஏற்பட்டன. அரசின் கட்டுப்பாட்டிற்குள்ளும் வெளியும் காணப்பட்ட பல தாக்கங்கள் இறுக்கமானதொரு வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தைக் கடைப்பிடிக்கச் செய்ததுடன், இறைக்கட்டுப்பாடுகளை மேற்கொள்வதையும் கடினமாக்கியது. மேலதிகமாக ஏற்பட்ட கடப்பாடுகளையும் உயர்ந்த செலவு அதிகரிப்புக்களையும் உள்ளடக்கும் வகையில் செலவின் மீதான வாக்களிக்கப்பட்ட மதிப்பீடுகள்இறை ஆண்டின்போது அடிக்கடி திருத்தியமைக்கப்பட்டன. முன் திட்டமிடப்படாததும் ஒதுக்கீடு செய்யப்படாததும் அமைச்சுக்களினால் உறப்பட்ட மேலதிகச் செலவுகள் துணை ஒதுக்கீடுகளில் உள்ளடக்கப்பட்டன. அரசிறையிலும், நிதியிடல் வளங்களிலும் ஏற்றவளர்ச்சி ஏற்பட்டிருப்பின் இவ்வாண்டின்போது செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் வரவு செலவுத்திட்டத்தொழிற்பாடுகளில் காணக்கூடியதாகஇருந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காது. பின்கூறப்பட்ட இம் மூலங்களிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் உதவி கிடைக்கவில்லை. அரசிறையில் ஏற்பட்ட வளர்ச்சி செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் மிகக்குறைவாகவே காணப்பட்டது.

1980ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டக்குறையினை நிதியிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த சேமிப்புக்களைத் தனியார்துறையில் காணப்பட்ட உயர்ந்த மட்டத்திலான வர்த்தக, பொருளாதார நடவடிக்கைகளும், தேசிய சேமிப்பு வங்கியினால் வழங்கப்பட்ட வைப்பு வீதங்களுக்கேற்ப வர்த்தக வங்கிகளது வைப்பு வீதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டமை என்பன தம்முள் ஏற்கனவே ஈர்த்துக்கொண்டன. வரவு செலவுத்திட்டத்திற்குப் பெறப்பட்ட வெளிநாட்டு மூலவளங்கள் மூலவள இடைவெளியை நிரப்புவதற்குப் போதுமாக இல்லாமையின் விளைவாக அரசு பெருமளவான மூலவளத் தட்டுப்பாட்டிற்குட்பட்டு முன்னெப்பொழுதுமில்லாத அளவிற்கு வங்கி நிதியினை நாடவேண்டியேற்பட்டது.

1980ஆம் ஆண்டில் மீளத்திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டக்குறை ஒப்புதலளிக்கப்பட்ட மூலமதிப்பீடுகளைவிட 71 சதவீதம் கொண்டமிகப்பெருமளவான அதிகரிப்பைக்கொண்டிருந்தது. 1980 ஆம் ஆண்டில் அரசின் செலவு, மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைவிட 37 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முரணாக அரசிறை அதன் ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட 12 சதவீதமான மிகக்குறைந்த அதிகரிப்பையே கொண்டிருந்தது. இவ்வாறு மூல வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட மூலதனம், மீண்டெழும் செலவு இரண்டினதும் அதிகரிப்பு உண்மையான, சார்பு பெறுமதியில் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பினைவிட மிகக்கூடுதலாக விளங்கியது. அரசிறை, செலவு இரண்டினதும் சார்பு அடிப்படையிலான அதிகரிப்புக்களுக்கிடையே உள்ள பரந்த வேறுபாடு இறைத் தொழிற்பாட்டினை முகாமைத்துவத்தில் எழுந்த சிக்கல்களின் தன்மையைக் குறித்துக்காட்டுகின்றது. 1980ஆம் ஆண்டில் ரூ. 290,260 இலட்சமாக அமைந்த அரசின் மொத்த செலவு முன்னைய ஆண்டினைவிட 35 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. இதன்விளைவாக, மொத்தத்தேசிய உற்பத்தியில் அரசின் செலவின்பங்கு பெயரளவில் 1979 இன் 43 சதவீதத்திற்குமாறாக 1980இல் 47 சதவீதமாக அதிகரித்தது.

---

1. தற்காலிக தரவின் அடிப்படையில் அமைந்தது.

## அட்டவணை 1.31

### அரசின் இறைத்தொழிற்பாடுகள் 1977 - 1981

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1977 | 1978 | 1979 தற்காலி கமான | 1980 ஒப்புதல ளிககப்பட்ட மதிப்பீடு கள் | 1980* தற்காலிக மான | 1981 ஒப்புதல ளிக்கப்பட்ட மதிப்பீடு கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. வருவாய் (அ) ... | 6,686 | 11,688 | 12,730 | 12,262 | 13,756 | 15,550 |
| 2. மீண்டெழும் செலவினம் ... | 6,148 | 10,408 | 11,502 | 11,119 | 13,558 | 15,332 |
| 3. முற்பண கணக்குகளின் தொழிற் பாடுகள் (குறை — மிகை+) ... | -430 | -1,831 | -1,028 | - 100 | - 1,775 | + 675 |
| 4. நடைமுறைக் க்ணக்கு (மிகை + / குறை—) ... | +108 | - 551 | + 200 | + 1,043 | - 1,577 | + 893 |
| 5. மூலதனச் செலவு — ... | 3,182 | 6,614 | 8,991 | 9,963 | 13,693 | 12,739 |
| அவற்றில் கடன்கரைப்பு நிதி யம் பன்னாட்டு நிதியம் சார்ந்த நிறுவனங்கட்கான கடன் தீர்ப் பனவுக் கொடுப்பனவுகள் உதவு தொகைகள் .. | (947) | (1,165) (ஆ) | (1,182) (ஆ) | (1,346) | 1,502 (ஆ) | (1620) |
| 6. வரவு செலவுத் திட்டக்குறை ... | 3,074 | 7,165 | 8,791 | 8,920 | 1,5270 | 11,846 |
| 7. குறைக்கு நிதியிடல் | | | | | | |
| 7.1 உள்நாட்டு மூலங்கள் .. | 1,786 | 2,653 | 4,582 | 3,100 | 8,885 | 3,750 |
| (அ) வங்கியல்லா சந்தைக் கடன்கள் | 1,504 | 2,033 | 2,806 | 3,190 | 2,692 | 3,750 |
| (ஆ) சந்தையல்லாக் கடன்கள் ... | 505 | 453 | 1,026 | — | - 884 | — |
| (இ) வங்கித் தொழில்முறை (இ) .. | -224 | 167(ஈ) | 680(ஈ) | — | 7,077(ஈ) | — |
| 7.2 வெளிநாட்டு நிதி ... | 1,779 | 4,454 | 4,237 | 5,820 | 6,253 | 8,100 |
| (அ) பண்டக் கடன்கள் ... | 885 | 1,371 | 1,415 | 2,420 | 1,432 | |
| (ஆ) செயற்திட்டக் கடன்கள் ... | 394 | 1,645 } | 833 } | 1,171 | 1,171 | |
| (இ) நன்கொடைகள் .. | 500 | 661 } | 1,390 } | 3,190 | 2,137 | 8,100 |
| (ஈ) ஏனைய கடன்கள் (உ) ... | — | 778 | 599 | 300 | 1,513 | |
| 7.3 பண நிலுவைகளின் பயன்பாடு.. | -492 | 58 | - 28 | — | 133 | - 4 |
| 8. அரச இறைத் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் ... | -715 | 173 | 634 | — | 7,185 | - 4 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
திறைசேரி.

(அ) வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் காட்டப்பட்ட வருவாயில் மூலதன நன்கொடைகள் தவிர்ந்த

(ஆ) 1978இன் ரூ. 1740 இலட்சம், 1979இன் ரூ. 1780 இலட்சம் 1980 இன் ரூ. 2710 இலட்சம் (தற் காலிகம்) கொண்ட வெளிநாட்டு நிர்வாக எடுப்பனவுகளின் மீளளிப்புக்களையும் உள்ளடக்கும்.

(இ) பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளை நிறைவேற்ற மத்திய வங்கி கொடுத்த சிறப்பு முற்பணங்களையும் உள்ளடக்கும்.

(ஈ) வங்கித்துறையுடனான ரூபாக்கடன்களின் மீளளிப்புக்களுக்காகச் சீராக்கஞ் செய்யப்படவில்லை. 1978இல் ரூ. 520 இலட்சங்கள் 1979இல் ரூ. 180 இலட்சங்கள் 1980இல் 250 இலட்சம்.

(உ) ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடன் 1980 இன் ஏனைய கடன்கள் ப. நா. நி. பொறுப் பாண்மை நிதியக்கடன் ரூ. 5210 இலடசம், யூரோ நாணய பணிக்கடன் ரூ. 8970 இலட்சம் ஈராக் கடன் ரூ. 950 இலட்சங்களையும் உள்ளடக்கும்.

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ரூ. 17,750 இலட்சங்கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவைக் கொண்டதாய் மூலமதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்டதை விட கணிசமான அளவு கூடுதலாக விளங்கியது. இது உணவு ஆணையாளரின் வர்த்தகத் தொழிற்பாடுகளின் விளைவாக ஏற்பட்டதாகும். மேலும் 1979ஆம் ஆண்டின் முடிவில் ரூ. 8,910 இலட்சம் கொண்ட நிருவாகக் கடன்பாடுகளின் கீழான வெளிநின்ற பொறுப்புக்களும், செலவுக்கடப்பாடுகளும் 1980ம்ஆம் ஆண்டின் ஒன்று சேர்ந்த மூலவளங்களிலிருந்தே தீர்க்கப்பட்டன. உள்நாட்டு வங்கியல்லாத்துறையிலிருந்து பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதிகளில் ஏற்பட்ட பற்றுக்குறை காரணமாக நிதியை முகாமைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் மேலும் அதிகரித்தன.

மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடுகளின்படி நடைமுறைக் கணக்கு முன்னைய ஆண்டின் ரூ. 2,000 இலட்சம் கொண்ட மிகைக்கு முரணாக 1980ஆம் ஆண்டில் ரூ. 15,770 இலட்சங்கொண்ட குறையைப் பதிவுசெய்தது. முற்பணக்கணக்குகளின் கீழான வெளிக் கொடுப்பனவுகள் பெருந்தொகையாக அமையாதிருந்திருப்பின் ரூ. 137,560 இலட்சமாக அமைந்த நடைமுறை வரவுகள் ரூ. 135,880 இலட்சங்கொண்ட நடைமுறைச் செலவுகளுக்கும் இடமளித்து, சிறிதளவு மிகையையும் கொண்டிருக்கும். இவ்வாறாக ரூ. 17,750 இலட்சங்கொண்ட முற்பணக்கணக்குகளின் கீழான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்டிருக்கக்கூடிய மிகையை இல்லாமல் செய்துவிட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் (பெயரளவான) அரசின் வரவுகளின் பங்கு 26 சதவீதத்திலிருந்து 1980இல் 22சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும் மொ. தே. உ. (பெயரளவான) முந்திய ஆண்டைவிட 25சத வீத அதிகரிப்பைப் பதிவுசெய்த அதேவேளை அரசிறை மிகச் சிறிதளவான 8சதவீத அதிகரிப்பையே பதிவுசெய்து பொருளாதாரத்தில் பணவருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இதனைத் தொடர்புபடுத்தி நோக்குகையில் குறைவான அதிகரிப்பையே காட்டியது. 1980இல் தேறிய முற்பணக் கணக்குகளின் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மீண்டெழும் செலவு ரூ. 153,330 இலட்சமாக அமைந்து ரூ. 28,030 இலட்ச அல்லது 22சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும் மொ. தே. உ.யில் மீண்டெழும் செலவின்பங்கு 1979ஐப் போன்று 1980இலும் 25 சதவீதமாக விளங்கியது. கடன் கரைப்பு நிதிய உதவு தொகைகளையும், கடன் மீளக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மூலதனச் செலவு ரூ. 136,930 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் செலவினைவிட 52சதவீதம் கூடுதலாக விளங்கியது. மொ. தே. உ.யில் மூலதனச் செலவின் பங்கு 1979 இன் 18 சதவீதத்திலிருந்து 1980 இல் 22 சத வீதத்திற்கு அதிகரித்தது. நடைமுறைக் கணக்கின் குறையான ரூ. 15,770 இலட்சத்துடன் மூலதன வரவுசெலவுத் திட்டச் செலவான ரூ. 136,930 இலட்சமும் சேர்ந்து 1980இல் மொத்த வரவு செலவுத் திட்டக்குறை ரூ. 152,700 இலட்சமாகியது. இது ஒப்புதலளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டக்குறையைவிட 71 சதவீத அதிகரிப்பையும் முன்னைய ஆண்டின் குறையைவிட 74 சதவீத அதிகரிப்பையும் பதிவுசெய்தது. 1980 ஆல் இப்பதிவு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டக்குறை பெயரளவான மொ. தே. உ.யின் 25 சத வீதமாகும்.

வரவுசெலவுத் திட்டத்தின் மூலவளக் குறையை நிதியிடுவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 161,620 இலட்சம் பெறப்பட்டது. இத்தொகையில் ரூ. 8,910 இலட்சம் 1979 இல் ஏற்பட்ட வைப்பு மாற்றல்களைச் செலுத்துவதற்கும், வெளிநின்ற செலவுக் கொடுப்பனவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. மொத்த நியதிகளில் ரூ. 99,090 இலட்சங்கொண்ட மொத்த மூலவளங்களில் ஏறக்குறைய 61சதவீதம் உள்நாட்டுத்துறையிலிருந்து பெறப்பட்டது. இதில், ரூ. 70,770 இலட்சம் அல்லது 71 சதவீதம் வங்கித்துறையிடமிருந்து பெறப்பட்டது. 1980இல் திரட்டப்

பட்ட உள்நாட்டுச் சேகரிப்புக்கள் ரூ. 26,920 இலட்சமாக அல்லது மொத்த உள் நாட்டு மூலவளங்களில் 27 சதவீதமாக அமைந்து வரவு செலவுத்திட்டக் குறையில் 18 சத வீதத்திற்கு நிதியிட்டது. 1980இல் திரட்டப்பட்ட மொத்த மூலவளங்களில் வெளிநாட்டுதவி ரூ. 62,530 இலட்சமாக அல்லது 39 சதவீதமாக அமைந்து வரவு செலவுத்திட்டக் குறையில் 41 சதவீதத்தை நிதியிட்டது. வெளிநாட்டு உதவியில் பெரும்பகுதி கொடை வழங்கீட்டு வடிவில் பெறப்பட்டது. இது, ரூ. 21,370 இலட்ச மாக அமைந்த அதேவேளையில், பண்ட, செயற்றிட்டக் கடன்கள் முறையே ரூ. 14,320 இலட்சமாகவும், ரூ. 11,710 இலட்சமாகவும் அமைந்தன. ஏனைய வெளி நாட்டு நிதிகள் ரூ. 15,130 இலட்சமாகவும் இது, ப. நா. நி. பொறுப்பாண்மை நிதி யக் கடனையும் (ரூ. 5,210 இலட்சம்) யூரோ நாணய வர்த்தகக் கடனையும் (ரூ. 8,970 இலட்சம்) ஈராக் அரசிடமிருந்து பெற்ற கடனையும் (ரூ.950 இலட்சம்) உள்ளடக்கும். முழுவரவு செலவுத் திட்டக் குறையையும் நிதியிடுவதற்கு வங்கித்துறை வழங்கிய ரூ. 70,770 இலட்சத்துடன் ரூ. 1,330 இலட்சங்கொண்ட காசு நிலுவையும் எடுப் பனவு செய்யப்பட்டு 1980இல் அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத் தாக்கம் 1979 இன் ரூ. 6,340 இலட்சத்திற்கெதிராக ரூ. 71,850 இலட்சம் வரையில் விளங்கியது.

1980 இன் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பும் 1981 இற்கான ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகளும் அட்டவணை 1. 31 இல் தரப்பட்டுள்ளன. அரசின் இறைத் தொழிற்பாடுகளின் பேரிலான 1980ஆம் ஆண்டுக்குரிய தேறிய பணக்குறை கடந்த 10 ஆண்டுகளுக்கான ஒப்பீட்டுத்தரவுகளுடன் புள்ளிவிபரப் பின்னிணைப்பின் அட்ட வணையில் தரப்பட்டுள்ளது.

**அரசிறை**

1980 இல் அரசிறை ரூ. 137,560 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இது, முன் னைய ஆண்டினைக் காட்டிலும் 8 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. உற்பத்தி, செலவினம் மீதான மறைமுக வரிகள் ரூ. 101,260 இலட்சமாக அமைந்து ரூ. 3,810 இலட்ச அல்லது 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது மொத்த அரசிறை வரவு களில் 1979 இன் 77 சதவீதமாக அமைந்தமைக்கு மாறாக 1980 இல் 74 சதவீதமாக அமைந்தது. முன்னைய ஆண்டுகளைப்போலன்று வெளிநாட்டு வர்த்தகத்தை அடிப் படையாகக்கொண்ட வரிகள் மொத்த மறைமுக வரிச் சேகரிப்புக்களில் முக்கியகூறாக அமைந்ததுடன் இதன் பங்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 72 சத வீதத்தி லிருந்து 65 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1980இல் நேர் வரிகள் ரூ. 19,060 இலட்சமாக அமைந்து 1979ஐவிட ரூ. 4,950 இலட்சம் அல்லது 35 சதவீத அதிகரிப் பைக் காட்டியது. மொத்த அரசிறையின் விகிதமாக நோக்குகையில் நேர் வரிகளின் பங்கு 1979இன் 11 சத வீதத்திலிருந்து 1980இல் 14சத வீதமாக அதிகரித்தது.

முழுப் பொருளாதாரத்திலும் ஏற்பட்ட செயலாற்றத்துடன் தொடர்புபடுத்தி மொத்த அரசிறையை ஆராய்கையில், அரசிறையில் ஏற்பட்ட 8 சதவீதம்கொண்ட வளர்ச்சி நிறைவு தருவதாக இல்லை. அரசிறை/மொ. தே. உ. விகிதம், வரி/மொ. தே. உ. விகிதம்ஆகிய இரண்டும் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தன. அரசிறையின் விகி தம்26 சதவீதத்திலிருந்து 22சதவீதமாக வீழ்ச்சியடைந்த வேளையில் வரி விகிதம் 23 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, வரி மூலமாகப் பெறப்பட்ட அரசிறைகளையும் உள்ளடக்கி முழு அரசிறையிலும் ஏற்பட்ட வளர்ச்சியின் அதிகரிப்பு வீதம் தேசிய வருமானத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒத்துச்செல்லத் தவறியமையைக் காட்டியது. எடுத்துக்காட்டாக பரும்படியான ஆண்டு மதிப்பீடு களின் அடிப்படையில் தேசிய வருமானத்துடன் தொடர்புபடுத்தி அரசிறையின்

## அரசிறையும் செலவும்

*நிதியாண்டின்படி எண்தொகைகள்**




* 1980இன் எண்தொகைகள் தற்காலிகமானவை.

இலங்கை மத்திய வங்கி.

1970/71ஐ உள்ளடக்கியதும், அதுவரையுமான நிதியாண்டுகள் 12 மாதங்களைக் கொண்டு செத்தெம்பர் 30 இல்முடிவடைந்தன. 1971/72ஆம் நிதியாண்டுக்குரிய தரவுகள் 1971 ஒற்ரோபர் தொடக்கம் 1972 திசெம்பா 31 வரையுள்ள 15 மாதங்களைக் கொண்டகாலப் பகுதிக்கும் 1973ஆம் ஆண்டுக்குரிய தரவுகள் 1973 திசெம்பர் 31 வரையுள்ள காலப் பகுதிக்கும் உரிவையாகும்.

நெகிழ்ச்சியைக் கணிக்கையில் இவற்றின் இணைப்புக்குணகம் 1979 இன் 0.322 இற்கெதிராக 1980 இல் 0. 289 ஆக விளங்கி அதிகரித்துச் செல்லும் பண வருமான வளர்ச்சியில், அரசிறை அதிகரிப்பின் தாக்கம் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது. வரியமைப்பு அரசதுறைக்கு வேண்டிய போதியளவு மூலவளத்தினை அதிகரிப்பது மட்டுமன்றி தொடர்ந்து விரிவடைந்து செல்லும் முதலீட்டுக்கு நிதியிடும் வகையில் தேசிய வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பிற்கேற்ற விகிதத்திலாவது அரசிறை விரிவடைதல்வேண்டும்.

மொத்த அரசிறையில் மறைமுகவரிகளின் சார்பு அடிப்படையிலான பங்கு 77 சதவீதத்திலிருந்து 74 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில், மொத்த மறைமுகவரி மூலமாக கிடைத்த அரசிறையில் வியாபார மொத்த விற்பனை வரிகளின் பங்கு 12 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது, வியாபார மொத்த விற்பனைவரிச் சேகரிப்புக்களில் 44 சதவீத அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.வியாபார மொத்த விற்பனவு வரிகளிலிருந்து கிடைத்த வரவுகள் அதிகரித்தமைக்கு வரி வீதங்கள் உயர்த்தப்பட்டமையும், உயர்ந்த மட்டத்திலான பொருளாதாரநடவடிக்கைகளும், பொருளாதாரத்தில் நிலவிய பண வீக்கத் தாக்கங்களும் காரணமாகும். வரி விழுப்பாட்டினைப் பொறுத்தவரை மறைமுக வரிகள் பெரும் பின்னடைவைக்காட்டின. எனினும் அரிசி, மா, சீனி போன்ற அன்றாட வாழ்க்கைக்கான அல்லது பெருந்தொகை மக்களின் நுகர்வுப்பொருட்கள் மொத்த விற்பனவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டமை பின்னடைவின் அளவினைஓரளவு குறைத்தது. இறக்குமதித்தீர்வைகளைப் பொறுத்தவரையிலும்பொருட்களின் இறுதிப்பயன்பாடு, கேள்வித்தன்மை போன்றவற்றிற்கு ஏற்ற வகையில் அதிகரித்துச் செல்லும் வரி அமைப்புமுறை புகுத்தப்பட்டது.

பன்னாட்டு வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட வரிகளின்பங்கு ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைத்தவரவுகள் குறைவடைந்தமையால் 55 சத வீதத்திலிருந்து 48 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெருமளவிற்கு தேயிலை உற்பத்தி செலவினம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட தேயிலை வரிகளில் ஏற்றுமதித்தீர்வைகள் முக்கிய அரசிறை விடயமாக விளங்கியதுடன் சென்ற ஆண்டின் 43 சதவீத பங்கிற்கு மாருக 36 சதவீதத்திற்கு வகைகூறின. ஏற்றுமதித் தீர்வையிலிருந்து பெற்ற சேகரிப்புக்கள் ரூ. 5,370 இலட்சத்தினுல் அல்லது 13 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேயிலை, தெங்குப் பொருட்களிலிருந்து பெற்ற தீர்வைச் சேகரிப்புக்கள் முறையே ரூ. 5,300 இலட்சத்தால் அல்லது 21 சதவீதத்தினுலும், ரூ. 1,270 இலட்சத்தினுல் அல்லது 38 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தன. தேலையிலிருந்து பெற்ற தீர்வை வரவுகள் குறைவடைந்தமை 1979 யூலையில் இருந்து தேயிலை மீதான குறிப்பிட்ட ஏற்றுமதித் தீர்வை ஒரு கிலோக்கிருமுக்கு ரூ. 15.50 இல் இருந்து ரூ. 10.50 ஆககுறைக்கப்பட்டமையால் பெரிதும் ஏற்பட்டது. ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 30 இலட்சம் கிலோக்கிருமினுல் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமையும்,பொதிகளிலும் உறைகளிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை மீதான தீர்வை 1980 யூலையிலிருந்து குறைக்கப்பட்டமையும் அரசிறையின் வீழ்ச்சிக்குக் காரணமாயின. அளவின் அடிப்படையிலான குறிப்பிட்ட தீர்வைக்கு உட்பட்ட தெங்குப் பொருட்களைப் பொறுத்தவரை இதன் வீழ்ச்சிக்கு உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 55 சதவீதத்தினுல் குறைவடைந்தமையால் ஏற்பட்டதாகும். மறுபுறம், உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையால் இறப்பரின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைந்த போதிலும் தொகையுடன் கூடிச் செல்லும்அளவில்அமைந்த அதன் ஏற்றுமதித்தீர்வையிலிருந்து பெற்ற சேகரிப்புக்கள்ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்புக்குக் காரணமாக ரூ. 990 இலட்ச அல்லது 8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

1979 நவெம்பரில் ஏலக்காய், கொக்கோ, சிற்றனல்லா எண்ணெய் போன்ற சில சிறு ஏற்றுமதிப்பொருட்கள் ஏற்றுமதித்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்ட போதிலும் சிறு ஏற்றுமதிகளிலிருந்து சேகரிக்கப்பட்டதீர்வை ரூ. 210 இலட்சத்தினுல் அல்லது 21 சதவீதத்தினுல் அதிகரித்து ரூ. 1,200 இலட்சமாக விளங்கியது. முக்கிய சிறு ஏற்றுமதிப்பொருட்களில் ஒன்ருன கயிற்றுத்தும்பின் ஏற்றுமதி அளவு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தபோதிலும் சாதகமான ஏற்றுமதிவிலைகள் காரணமாக ரூ. 580 இலட்சங்கொண்ட ஏற்றுமதித்தீர்வையை ஈட்டியது. உயர்ந்த ஏற்றுமதி விலைகள் கறுவா ஏற்றுமதியிலிருந்தும் ரூ. 220 இலட்சங்கொண்ட தீர்வையைச் சேகரிக்க உதவியது. காரீயத்தைப் பொறுத்தவரை உள்நாட்டு உற்பத்தி 41 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தபோதிலும் சாதகமான ஏற்றுமதிவிலைகள் காரணமாக மொத்த ஏற்றுமதி வரவுகள் ரூ. 790 இலட்சமாக அமைந்து ரூ. 200 இலட்சத்தினைத்தீர்வையாகப் பெற உதவின.

இரண்டாவது முதன்மை அரசிறைவிடயமான மொத்த மறைமுக வரிச் சேகரிப்புக்கள் 27 சதவீதமாக அமைந்து இதில் இறக்குமதித்தீர்வைகள்மொத்த அரசிறைவரவுகளில் 20 சதவீதத்திற்கு வகைகூறின. நடைமுறை இறக்குமதித் தீர்வைகளிலிருந்து பெற்ற வரவுகள் ரூ. 27, 540 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 21 சத வீத அதிகரிப்பைக்காட்டின. எனினும், சராசரி தீர்வை வீதம் 10 சத வீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மறுசொற்களில் கூறுவதாயின் இறக்குமதிமூலம்கிடைத்த அரசிறையின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம்இறக்குமதிப்பெறுமதியில் ஏற்பட்டவளர்ச்சியின் அதிகரிப்புடன் ஒத்துச்செல்லவில்லை. பெறுமதியின் நியதியில் இறக்குமதிகள் 49 சதவீதத்தினுல் அதிகரித்தன. ஆனுல்இறக்குமதி மூலம் கிடைத்த அரசிறை 21 சதவீதத்தினுல் மட்டுமே அதிகரித்தது. இது பெரிதும் பெற்ரேலியம், வளமாக்கி அரசதுறையின்முதலீட்டுப்பொருட்கள் போன்ற தீர்வைக்குட்படாத பொருட்களின் இறக்குமதிப்பெறுமதி கணிசமான அளவு அதிகரித்தமையால் ஏற்பட்டதாகும். அரிசி, மா, சீனி பெற்ரேலியம், வளமாக்கி போன்ற குறிப்பிட்டுக் கூறக்கூடியவை தவிர்ந்த ஏனைய இறக்குமதிகளில் தீர்வை வீதம் 12 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிலையாக இருந்தது.

மறைமுக வரிகளில் முக்கியவிடயமான தேர்ந்த விற்பனவுகள் மீதான வரிகளும் வீழ்ச்சியைப்பதிவு செய்தன. மாருக அரசிறையில் மறைமுகவரியின் பங்கு 20 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை மொத்த அரசிறையில் இதன்பங்கு 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உண்மையான நியதிகளில் நோக்குமிடத்து தேர்ந்த விற்பனவுகளின் வரிகளிலிருந்து பெற்ற சேகரிப்புக்கள் 7 சதவீதம் அல்லது ரூ. 1340 இலட்ச வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இது தேயிலைப் பெறுமான விகிதவரிகளிலும், தெங்கு உள்ளீட்டுப்பொருள்கள்மீதான நிருவாகத்தீர்வையிலும் இருந்துபெற்ற வரவுகள் குறைவடைந்தமையின் விளைவாக ஏற்பட்டதாகும். தேயிலைப்பெறுமான விகித வரியில் ஏற்பட்ட ரூ. 1,250 இலட்சம் கொண்ட வீழ்ச்சி வரிவிகிதங்கள் குறைக்கப்பட்டமையாலும், வரிவிதிக்கப்பட்ட விலையின் எல்லை உயர்த்தப்பட்டமையாலும் ஏற்பட்டதாகும். தெங்கு உள்ளீட்டுப் பொருட்களின் நிருவாகத்தீர்வையைப் பொறுத்தவரை வீழ்ச்சி ரூ. 2,750 இலட்சம் அல்லது 71 சதவீதமாகும். இது ஏற்றுமதி செய்த அளவு 55 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட விலை உயர்த்தப்பட்டமையாலும் ஏற்பட்டதாகும். புகையிலை, குடிவகை மீதான தீர்வை இரண்டும் அதிகரித்த வரவுகளைப் பதிவு செய்தன. புகையிலைமீதான தீர்வையிலிருந்து கிடைத்த வரவுகள் ரூ. 9,930 இலட்சமாக அமைந்து ரூ. 1,920 இலட்சம் அல்லது 24 சதவீத அதிகரிப்பைக்காட்டியவேளையில் குடிவகையிலிருந்து கிடைத்த

வரவுகள் ரூ. 5,720 இலட்சமாக அமைந்து ரூ. 740 இலட்சம் அல்லது 15 சத வீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் பெரிதும் புகையிலை, குடிவகை என்பன தொடர்பான வரிகள் உயர்த்தப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.

நேர் வரிகளிலிருந்து பெற்றசேகரிப்புக்கள் ரூ. 19,060 இலட்சமாக அமைந்து ரூ. 4,960 இலட்சம் அல்லது 35 சதவீத அதிகரிப்பைக்காட்டின. பகுக்கப்பட்ட தரவுகள் கிடைக்கக்கூடியதாக இல்லாவிடினும், கூட்டுதுறையிலிருந்து உயர்ந்தள வான வரவுகளாலேயே இது பெரிதும் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. மொத்த அரசிறையில் நேர்வரிகளின் பங்கு 11 சதவீதத்திலிருந்து 14 சதவீத மாக அதிகரித்தவேளையில், மொ.தே.உ. (பெயரளவான) இல் வரிகளின் விகிதம் 2.8 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதமான மிகச்சிறிதளவான அதிகரிப்பைப் பதிவு செய்தது.

**மீண்டெழும் செலவு**

மிக அண்மையில் பெறப்பட்ட மதிப்பீடுகளின்படி முற்பணக் கணக்குகளின் தேறிய வெளிக்கொடுப்பனவுகளையும் துணை ஒதுக்குகளையும் உள்ளடக்கிய மொத்த மீண்டெழும் செலவு 1980இல் ரூ. 153,330 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டினைவிட 22 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இம் மொத்தத் தொகையில் மீண்டெழும் வாக்குகள் மீதான மொத்தத் துணை ஒதுக்குகள் ரூ. 24,890 இலட்சமும், முற்பணக் கணக்குகளின் மீதான வெளிக் கொடுப் பனவுகள் ரூ. 17,750 இலட்சமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆளணிக்கான ஊதியங்களும், ஓய்வூதியங்களும் ரூ 37,300 இலட்சமாக வும், ரூ, 7,350 இலட்சமாகவும் அமைந்து முறையே 12 சதவீத 28 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அதே வேளையில் மொத்த மீண்டெழும் செல வில் இவற்றின் மொத்தப் பங்கு 31 சதவீதத்திலிருந்து 29 சதவீதமாகச் சிறி தளவால் வீழ்ச்சியடைந்தது. பெரிதும் திறைசேரி உண்டியல்கள், ரூபாப் பிணை கள் என்பவற்றின் மீதான உயர்ந்தளவான வட்டிக் கொடுப்பனவுகள் காரண மாக பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 22,820 இலட்சமாகஅமைந்து 34 சத வீத அதிகரிப்பைக் காட்டியது. தேசிய சேமிப்பு வங்கிக்கான வட்டி உதவுதொகை ரூ. 2,580 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டின் ரூ. 920 இலட்சத்தினை விட மூன்று மடங்கு அதிகரிப்பைக்காட்டியபோதிலும், சென்ற ஆண்டின் கொடுப்பனவு களுக்கான கால இடைவெளியை கணக்கில் எடுப்பின் உண்மையான அதிகரிப்பு ரூ.360 இலட்சமாக அல்லது 16 சதவீதமாக மட்டுமே அமைந்தது. 1978 இருந்து நடைமுறையிலிருந்துவந்த வருமான உதவித்திட்டம் 1980 யூலையிலிருந்து இல் லாமல் செய்யப்பட்டு மூல ஒதுக்கான ரூ. 2,300 இலட்சத்தில் செலவிடப்படா திருந்த தொகை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கு மாற் றப்பட்டது. நுகர்வோர் விலை உதவுதொகைக்கு நேரடி வருமான மாற்றல் மூலம் பதிலீடாக அமைந்த உணவு, மண்ணெண்ணெய் முத்திரைத் திட்டத் தின் மீதான செலவு முறையே ரூ. 15,950 இலட்சமாகவும் ரூ. 1,820 இலட் சமாகவும் அமைந்தன. எனினும், குழந்தைகளுக்கான பால் உணவைப் பொறுத் தவரை விலை உதவு தொகை நிலவியது. இதில் மதிப்பிடப்பட்ட செலவு சென்ற ஆண்டின் ரூ. 750 இலட்சத்திற்கெதிராக 1980 இல் ரூ. 1,050 இலட்சமாக அமைந்தது. அரசபள்ளிக்கூடங்களில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவது என்ற தீர்மானம் மீண்டெழும் செல வில் ரூ.730 இலட்சத்தைக் கொண்ட ஒரு புதிய வாக்கிற்கான தேவையை

ஏற்படுத்தியது. ஆகக்குறைந்த உற்பத்தியாளர் விலையை உத்தரவாதம் செய்த தேயிலைக்கான விலை உதவித் திட்டத்தின் கீழான உதவு தொகை ரூ. 650 இலட்சமாக அமைந்தது. மொத்த இறக்குமதித் தீர்வைக்கழிவு சென்ற ஆண்டின் ரூ. 1,400 இலட்சத்தினைக் கொண்ட கொடுப்பனவிற்கெதிராக ரூ. 3,500 இலட்சமாக அமைந்தது. இது முக்கியமாக ஆடைகளின் ஏர்றுமதிப் பெறுமதி கணிசமான அளவு அதிகரித்தமையால் ஏற்பட்டது. இதற்காக இறக்குமதி செய்யபட்ட மூலப் பொருட்களில் செலுத்தப்பட்ட தீர்வைகள் கழிவிற்கு தகுதி வாய்ந்தவையாக அமைந்தன.

அரசுசார் நிறுவனங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த மாற்றல்கள் சென்ற ஆண்டின் ரூ. 9,140 இலட்சத்திற்கெதிராக இவ் ஆண்டின் தொகை தற்காலிகமாக ரூ. 17,220 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அரசுசார் நிறுவனங்களுக்கான நடைமுறைமாற்றல்கள் பல காரணங்களால் ஏற்பட்டன. முதலாவதாக இலாப நோக்கமற்ற அரசுசார் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறைச் செலவுகளை எதிரீடுசெய்வதற்கும், இரண்டாவதாக குறிப்பிட்ட சில உதவுதொகைத் திட்டங்களைப்பேணுதல் போன்ற கொள்கையடிப்படையிலான தீர்மானங்களை நோக்கமாகக் கொண்டும் மூன்றாவதாக நட்டங்களை இழப்பீடு செய்வதற்கும் இம்மாற்றல்கள் செய்யப்பட்டன. நடைமுறை மாற்றல் நிதிகளில ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக அரச வளமாக்கி கூட்டுத்தாபனத்திற்கும், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கும் (இமபோச) கொடுக்கப்பட்ட உயர்ந்த அளவு தொகை காரணமாக ஏற்பட்டது. அரச வளமாக்கிச் கூட்டுத்தாபனத்திற்கு வளமாக்கி மீதான உதவுதொகையாக சென்ற ஆண்டில் கொடுக்கப்பட்ட ரூ. 3,950 இலட்சத்திற்கெதிராக இவ்வாண்டில் ரூ. 8,000 இலட்சம் கொடுக்கப்பட்டது. இலங்கை போக்குவரத்து சபையினைப் பொறுத்தவரை சென்ற ஆண்டின் ரூ.850 இலட்சக் கொடுப்பனவிற்கெதிராக இவ்வாண்டில் தொழிற்பாட்டு நட்டங்களை இழப்பீடு செய்வதற்காக ரூ. 4,570 இலட்சம் கொண்டதொகைமாற்றல் செய்யப்பட்டது. பாற்சபைக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ. 530 இலட்சமும் உற்பத்தியாளர் உதவு தொகைத் திட்டத்தின்கீழ் தாள் ஆலைக் கூட்டுத்தாபனத்திற்கும் ரூ. 290 இலட்சம் மாற்றல் செய்யப்பட்டது. இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் பகுப்பில் முக்கியமான மாற்றங்களைப் பெற்றவைகளாக பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழகக் கொடைவழங்கீட்டு ஆணைக்குழு (ரூ. 1,090) இலட்சம், சுற்றுலாச்சபை (ரூ. 490 இலட்சம்); தேசிய தொழில் பயிலுனர் சபை (ரூ. 410 இலட்சம்) தேசிய இளைஞர் பணிகள் சபை (ரூ. 300 இலட்சம்) விளங்குகின்றன.

**முற்பணக்கணக்குகள்**

இவ்வாண்டில் முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகள் சென்ற ஆண்டின் ரூ. 10,280 இலட்சத்திற்கெதிராக ரூ 17,750 இலட்சமாக அமைந்தது. இது 1980 இல் மொத்த மீண்டெழும், செலவில் ஏறககுறைய 13 சதவீதமாகும். முன்னைய ஆண்டில இது 9 சதவீதமாகும். தேசிய வெளிக்கொடுப்பனவுத் தொகையான ரூ.15,250 இலட்சத்துடன் உணவு ஆணையாளரின் உணவுக்கொள்வனவு பங்கீட்டுக்கணக்குகள், முற்பணக்கு நடவடிக்கைகளில் முக்கிய பங்கை வகித்தன. மீதித்தொகை ஏனைய முற்பணக்கணக்குகளில் ஏற்பட்டது. தற்காலிகத் தரவுகளின்படி இலங்கை சீனு வர்த்தகக் கணக்குத்தொடர்பான தொழிற்பாடுகள் ரூ 2,080 இலட்சங்கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவை(செலவைக்) கொண்டிருக்கும். பொருட்கள் பணிகளின் அதிகரித்த செலவும், அதிகரித்த நடவடிக்கைகளும் இணையாக வாக்களிக்கப்பட்ட செலவுகளினுல் ஈடுசெய்யப்படாத முற்

பணக்கணக்கு நடவடிக்கைகளில் ஏற்பட்ட நட்டங்களும், அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகரித்த கடன் வசதிகளும், இம்முற்பணங்களைப் பெரிதும் நாட வேண்டியதேவையை ஏற்படுத்தின. உணவு ஆணையாளரின் முற்பணக்கணக்கில் ஏற்பட்ட இப்பெருமளவு வெளிக்கொடுப்பனவுகளுக்கு குறிப்பாக சீனி, கோதுமை மா என்பவற்றின் அதிகரித்த விலைகளே முற்றுப்பொறுப்பாக இருந் தன. உணவு ஆணையாளரின் செலவுகள் வர்த்தக நட்டங்களையும் வர்த்தக வருமதியாளரின் அதிகரிப்பையும் கொண்டிருந்தன. மூலவரவு செலவுத்திட்டம் எல்லா முற்பணக்கணக்கு நடவடிக்கைகளுக்கும் ரூ. 1,000 இலட்சங்கொண்ட ஒதுக்கை மட்டுமே கொண்டிருந்தது. எனவே முற்பணக்கணக்குத் தொழிற் பாடுகள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டான இவ்வாண்டிலும் வரவு செலவுத் திட்டச்சிக்கல்கட்கு முக்கிய காரணியாக அமைந்தன. முன்னைய அறிக்கைகளும், மீளாய்வுகளும், இச்சிக்கல்களை எடுத்துக் காட்டியதுடன் முற்பணக்கணக்கு நட வடிக்கைகள் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் வெளிப்படையாக உள்ளடக் கப்படும்வகையில் வரவுசெலவுத்திட்ட அமைப்பினைச் சீராக்க வேண்டிய தேவை யையும் எடுத்துரைத்தன.

## மூலதனச் செலவு

துணை ஒதுக்கீடுகளை உள்ளடக்கிய மொத்த மூலதனச் செலவு ரூ. 136,930 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டைவிட ரூ. 47,020 இலட்சம் அல்லது 52சத வீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. துணை மதிப்பீடுகள் ரூ. 38,010 இலட்சமாக அமைந்து 31 சதவீதமான அதிகரிப்பைப் பதிவுசெய்தன. கடன்கரைப்பு நிதியங் களும், கடன் மீளக் கொடுப்பனவுகளும் நீங்கலான மொத்த மூலதனச் செலவு சென்ற ஆண்டின் ரூ. 78,090 இலட்சத்திற்கெதிராக ரூ 121,910 இலட்சமாக அமைந்து 56 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கடன் கரைப்பு நிதியங்களும், கடன் மீளக் கொடுப்பனவுகளும் ரூ. 15,020 இலட்சமாக அமைந்து சென்ற ஆண்டைவிட ரூ. 3,200 இலட்ச அதிகரிப்பைக் காட்டின.

அரசின் கணக்குகள் முழுமைசெய்யப்படாமையால் உண்மையான செலவை இன்னும் கணக்கிடுசெய்ய முடியாமல் உள்ளது. மூலமதிப்பீடுகளையும், திரட்டப் படக்கூடியதாக இருந்த மொத்த மூலவளங்களுக்கெதிராக இயைபுபடுத்தப்பட்ட துணை ஒதுக்கீடுகளையும் கொண்டு மொத்த மூலதனக் கணக்கில் தற்காலிகமாக ஒரு குறைச் செலவின் அளவினைக் கணிக்க முடிந்தது. இதன்படி, கணிக்கப்பட்ட குறைச் செலவு வீதம் 15 சத வீதமாகும். கடன் கரைப்பு நிதியங்களும், கடன் மீளக் கொடுப்பனவுகளும் நீங்கலான தேறிய மூலதனச் செலவு இவ்வாண் டில் 56 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. செலவினத்தின் நிதி இலக்குகள் எவ் வளவுதூரம் அடையப்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதாக மட்டுமே மூலதனச் செலவினத்தின் இத்தரவுகள் விளங்கமுடியும் என்பது கவனிக்கத்தக்கது. உண்மை யான இலக்குகள் எவ்வளவு தூரம் அடையப்பட்டுள்ளன என்பதை இத்தரவுகள் சரியாகக் காட்டாது. பணவீக்கப் போக்கினைக் கருத்திற் கொள்ளும்போது உண் மையான அதிகரிப்பை அறியவேண்டின் மூலதனச் செலவுத் தரவுகள் சுருக்கி நோக்கப்படல்வேண்டும். உள்ளடக்கமான மொ. தே. உ. சுருக்கியை பயன்படுத் தினால் நடைமுறை விலைகளில் மொத்த மூலதனச் செலவின் அதிகரிப்பு சென்ற ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 56 சத வீதத்திற்கெதிராக 32 சதவீதமாக அமைவ தைக் காணலாம். நாட்டில் மூலதன இருப்புக்களை அதிகரிக்கும் நோக்கினைக் கொண்ட முதலீட்டு நடவடிக்கைகளுடன் ஒத்தவகையில் மூலதனச் செலவுகளின் அதிகரிப்பு விளங்கும் அதேவேளையில், குறுகிய காலத்தில் விரைந்த பயனளிக்கும் திட்டங்களுக்கும், நீண்ட காலத்தில் அதிகளவு பலனளிக்கும் திட்டங்களுக்குமிடை

யேஏற்கத்தக்க சமநிலை நிலவும் வகையில் முதலீட்டுவளங்கள்பங்கிடப்படவேண்டியதை உறுதிப்படுத்துவதும் வேண்டியதொன்ருகும். இவ்வாறு பங்கிடுவதன்மூலம் மொத்தக் கேள்வி அதிகரிப்பினல் எழக்கூடிய பணவீக்கத் தாக்கத்தினைக் குறைக்க உதவலாம். மேலும் முதலீட்டு மூலவளங்களைப் பயன்படுத்தும்போது சென்மதி நிலுவை நிலைக்கு உதவும் வகையில், பொருளாதாரத்தின் ஏற்றுமதித் துறையுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். மூலவளங்களைப் பங்கிடுகையில், நாட்டின் உடனடித் தேவைகளுக்கும், நீண்டகால வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் முதன்மையளிக்கும் வகையில் அவை மேற்கொள்ளப்படல்வேண்டும்.

அமைச்சுகளின் அடிப்படையிலான மூலதனச் செலவின் பகுப்பு புள்ளி விபரப் பின்னிணைப்பின் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில் மகாவலித் திட்டம் மீதான உண்மையான செலவு, வரவு செலவுத்திட்ட ஒதுக்கான ரூ. 35,000 இலட்சத்திற்கெதிராக ரூ. 31 370 இலட்சமாக அமைந்து 10 சதவீத குறைச் செலவு வீதத்தைப் பதிவு செய்தது மொத்தத்தில் Iஆம், IIஆம் IIIஆம் கட்டங்களுடன் தொடர்பான அபிவிருத்தி வேலைகளில் ரூ.4,390 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் ரூ.4,280 இலட்சம் II ஆம், III ஆம் கட்டங்களில் செலவிடப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட திட்டத்தில் அமைந்த நான்கு முக்கிய செயற்றிட்டங்கள் மீதான செலவு ரூ. 21,760 இலட்சமாக அமைந்தது. இவை விக்டோரியா (ரூ. 9,010 இலட்சம்), கொத்மலை (ரூ. 8,620 இலட்சம்) றந்தெனிகல (ரூ. 300 இலட்சம்), மாதுறுஓயா (ரூ. 8,930 இலட்சம்) என்பனவாகும். நீர்பாசன அமைப்புக்களில் செலவிடப்பட்டதொகை ரூ. 3,500 இலட்சமாகும். இதில், ரூ, 990 இலட்சமும், ரூ. 2,400 இலட்சமும் முறையே "ஆ", "இ" நீர்பாசன அமைப்புக்களில் செலவிடப்பட்டன. மீதியான ரூ. 1,720 இலட்சமும் உல்கித்திய ஓயா, மொறகாகந்த நீர்த்தேக்கத் திட்டங்களிலும், ருேத்தலவெல, கண்டக்காடு நீர்ப்பாசன வேலைகளில் செலவிடப்பட்டது.

உள்ளூராட்சி, வீடமைப்பு கட்டிடவாக்க அமைச்சின் வீடமைப்புத் திட்டத்தில் ரூ. 10,380 இலட்சம் செலவிடப்பட்டது. இது, அமைச்சின் மொத்த வாக்களிக்கப்பட்ட செலவில் 48 சதவீதமாகும். மிக முக்கியமான தனிப்பெரும் விடயம் ரூ. 6,340 இலட்சம் கொண்ட நகர்ப்புற வீடமைப்புத்திட்டமாகும். தொகுதிவாரியான வீடமைப்புத் திட்டம் ரூ. 300 இலட்சம் ஒதுக்கினையே கொண்டிருந்தபோதிலும் உண்மையான செலவு ரூ. 1,670 இலட்சமாக அமைந்தது. குறைந்த செலவிலான வீடமைப்புத் திட்டமும் தீவிர வீடமைப்புத் திட்டமும் (கொழும்பு மெற்ருேப் போலியன் பிரதேசம்) மிக உயர்ந்த அளவு வீதத்திலான குறைச்செலவினைக் கொண்டிருந்தன. இவை முறையே ரூ. 230 இலட்சமும், ரூ. 220 இலட்சமும் கொண்டஒதுக்குகளுக்கு எதிராக ரூ. 80 இலட்சமும், ரூ. 70 இலட்சமும் கொண்ட தொகைகளை இத்திட்டங்கள் முறையே பயன்படுத்தின. உதவி வழங்கப்பட்ட தன்னுதவி வீடமைப்புத் திட்டத்திலும் மாதிரிக் கிராமத்திட்டங்களிலும் செலவிடப்பட்ட தொகை முறையே ரூ, 1,390 இலட்சம், ரூ. 80 இலட்சம்கொண்ட ஒதுக்குகளுக்கு எதிராக ரூ. 1,300 இலட்சமாகவும், ரூ. 90 இலட்சமாகவும் அமைந்தன. அமைச்சினுல் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு நடவடிக்கைகளுடன் தேசிய வீடமைப்பு நிதியத்தினுலும் ரூ. 230 இலட்சம் செலவிடப்பட்டது.

1980 இல் சிறி ஜயவர்த்தனபுரம் நாடாளுமன்ற அமைப்பு வேலைகளில் உரிய அமைச்சுகளினுல் ரூ. 5,620 இலட்சம் செலவிடப்பட்டது. இதற்கான ஒதுக்குகள்

பல அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்டன. கட்டிடத் திணைக்களத்தினால் முக்கிய கட்டிடவாக்க வேலைகளில் ரூ. 3,100 இலட்சம் செலவிடப்பட்டது. நிலமீட்பு அபிவிருத்தி சபை ரூ. 1,050 இலட்சம் செலவிட்டது. இத்திட்டத்திற்கான ஏனைய செலவுகள் மின் சபை (ரூ. 560 இலட்சம்), பெருந்தெருக்கள் (ரூ. 370 இலட்சம்) தொலை தொடர்பு பணிகள் (ரூ. 350 இலட்சம்), நீர் வழங்கல் வடிகால் (ரூ. 190 இலட்சம்) ஆகியவற்றால் உறப்பட்டன.

கொ. பெ. பொ. ஆ இற்கு 1980 இல் ஒதுக்கப்பட்ட ரூ. 100 இலட்சத்துடன் 1979 இல் திறைசேரி வைப்புகளுக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ 1,080 இலட்சமும் பயன்படுத்தப்பட்டது. எனினும், இவ்வாண்டின் உண்மையான செலவு ரூ 540 இலட்சமாக அமைந்தது. இது முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் (ரூ. 130 இலட்சம்) நீர்கொழும்பு நகர அபிவிருத்தி (ரூ. 110 இலட்சம்), கொ. பெ. பொ. ஆ. கட்டிடக் கொள்வனவு (ரூ. 230 இலட்சம்), உள்ளூராட்சி மன்றங்களுக்கான மூலதன கொடை வழங்கீடுகள் (ரூ. 70 இலட்சம்) என்பவற்றில் செலவிடப்பட்டது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திற்கென ரூ. 4,200 இலட்சம் ஒதுக்கப்பட்டது இதில் ரூ 4,130 இலட்சம் செலவிடப்பட்டது. அநுராதபுரம் மாவட்டத்தில் செலவிடப்பட்ட தொகையினை இது உள்ளடக்கவில்லை. வருமான உதவித் திட்டம் 1980 இல் இல்லாமல் செய்யப்பட்டு இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திற்கு மாற்றப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ் முக்கிய விடயங்கள் கல்வி (ரூ. 1,180 இலட்சம்), (தொடர்பூட்டல் ரூ. 1,020 இலட்சம்), வேளாண்மையும், நீர்ப்பாசனமும் (ரூ. 480 இலட்சம்) உள்ளூராட்சி மன்ற வேலைகள் (ரூ. 430 இலட்சம்), குடியியல் நிருவாகம் (ரூ. 200 இலட்சம்) என்பனவாகும்.

### வரவு செலவுத்திட்டக் குறையை நிதியிடல்

அரசின் இறைத் தொழிற்பாடுகள் காரணமாக எழுந்த வரவு செலவுத் திட்டக்குறை இவ்வாண்டின் மூல மதிப்பீடான ரூ. 89,200 இலட்சத்திற்கு எதிராக ரூ. 152,700 இலட்சமாக விளங்கியது. ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் ஏற்பட்டகுறை ரூ. 87,910 இலட்சமாகும். எனினும், வழமையான நிதி மூலங்களிலிருந்து கிடைக்கக் கூடிய வளங்கள இக்குறையை ஈடுசெய்யும் வகையில் விரிவடையவில்லை. இதனால் உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து மேலதிக வளங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தகக் கடன்பாடுகள் உட்பட மொத்த வெளிநாட்டு நிதி, வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ. 58,200 இலட்சத்திற்கெதிராக ரூ. 62,530 இலட்சமாக விளங்கியது. உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைத்த வங்கியல்லாக் கடன்பாடுகள் ரூ 26,920 இலட்சமாகும், இது மூல மதிப்பீடான ரூ. 31,000 இலட்சத்தினைவிட மிகவும் குறைவானதாகும். இச்சிக்கல் வாய்ந்த நிதி நிலைமையானது சந்தையல்லாக் கடன்பாடுகள் விடயத்தில மேலும் பரந்ததாகவும் அதிகமாகவும் விளங்கியது, இதில் கடன் தொழிற்பாடுகளும் கடந்த காலக் கடன்பாடுகளின் தீர்ப்பனவுகளும் ரூ. 8,840 இலட்சம் கொண்ட தேறிய கொடுப்பனவில் முடிவடைந்தன. இவ்வாறாக இறுதியான நிலை ரூ. 72,100 இலட்சம் கொண்ட மூலவளக் குறையை வெளிப்படுத்தியது. இதன் விளைவாக திறைசேரி நிதி முகாமைத்துவத்தில் சிக்கலை எதிர்நோக்கியது. தனது கடப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு அரசு வங்கித்துறையிடமிருந்து கடன் பெறவேண்டிய நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டது. குறைக்கான மொத்த

வங்கி நிதியிடல் ரூ. 70,770 இலட்சமாக அமைந்த வேளையில் ரூ. 1,330 இலட்சம் கொண்ட பண நிலுவைகளை எடுப்பனவு செய்ததன் மூலம் நிரப்பப்பட்டது

உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து நிதியைத் திரட்டுவதில் குறிப்பிடத்தக்க வெற்றி கிட்டாமையினால் 1979 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட யூரோ நாணய வர்த்தகக் கடன்களிலிருந்து அரசு எடுப்பனவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. மேற்கூறப்பட்ட வர்த்தகக் கடன்பாடு உட்பட வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் ரூ. 62,530 இலட்சமாக அமைந்து மொத்த வரவு செலவுத் திட்டக் குறையில் ஏறக்குறைய 41 சத வீதத்திற்கு நிதியிட உதவியாயிருந்தது. எனினும் யூரோ டொலர் கடன்பாட்டைத் தவிர்த்து நோக்கின் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு உதவி வாயிலாகப் பெறப்பட்ட தொகை ரூ. 53,560 இலட்சமாக அமைந்தது. பின் கூறப்பட்ட எண்தொகையின்படி வெளிநாட்டு நிதிகள் வரவு செலவுத் திட்டக் குறையை நிரப்புவதில் 35 சத வீதத்திற்கு உதவின.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 20,160 இலட்சம் அல்லது 48 சத வீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. கடன்நிதி 45 சத வீதத்தால் அதிகரித்த அதே வேளையில் கொடை வழங்கீடுகள் 54 சத வீதத்தால் அதிகரித்தன. வர்த்தகக் கடன்பாடுகளைத் தவிர்த்து நோக்கின் கடன் நிதியில் ஏற்பட்ட அதிகரிப்பு 8 சத வீத அதிகரிப்பைமட்டுமே பதிவு செய்தது. ''ஏனைய கடன்களின்'' கீழ் பகுக்கப்பட்ட வர்த்தகக் கடன்களை உள்ளடக்கிய காசுக் கடன்கள் ரூ. 9,140 இலட்சத்தினாலும், செயற்றிட்டக்கடன்கள் ரூ. 3,380 இலட்சத்தினாலும் அதிகரித்தன. பண்டக்கடன்கள் சிறிதளவான அதிகரிப்பைப் பதிவு செய்தன. செயற்றிட்டக் கடன்களின் கீழ் ரூ. 11,710 இலட்சமும், காசுக் கடன்களின் கீழ் ரூ. 15,130 இலட்சமும், பண்டக் கடன்களின் கீழ் ரூ. 14,320 இலட்சமும் கொண்ட மூலவளங்கள் பெறப்பட்டன மொத்த கொடை வழங்கீடுகள் ரூ. 21,370 இலட்சமாக அமைந்தன.

நிதியிடலின் முக்கிய மூலமாக வழமையாக விளங்கும் அரசின் செல்வாக்கிற்குட்பட்ட மூலங்களிலிருந்து பெற்ற மூலவளங்கள், தனியார்துறை நடவடிக்கைகள் வரவு செலவுத் திட்டத்திற்கு வெளியிலான நடவடிக்கைகள் போன்றவற்றை நோக்கிக் கவரப்பட்டன. இதன் விளைவாக வங்கியல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ 28,060 இலட்சத்திற்கெதிராக ரூ. 26,920 இலட்சமாக மட்டும் அமைந்தன. மறுபுறம் சந்தையல்லாக் கடன்பாடுகளில் ரூ. 8,840 இலட்சங் கொண்ட ''எதிர்க்கணிய நிதியிடல்'' ஏற்பட்டது. இவ்வாறாக மூலவளக் குறை ரூ. 70,770 இலட்சங் கொண்ட வங்கித்துறையிடமிருந்து பெற்ற கடன்பாடுகளாலும், ரூ. 1,330 இலட்சங் கொண்ட பண நிலுவைகளின் பயன்பாட்டினாலும் நிரப்பப்பட்டது.

வங்கியல்லா மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள், ரூபாப் பிணைகளிலிருந்து பெற்ற ரூ. 28,020 இலட்சத்தைக் கொண்டிருந்தன. திறைசேரி உண்டியல் கையிருப்பில் ஏற்பட்ட ரூ. 1.060 இலட்சம் கொண்ட விற்பனைக்கும், ரூ. 40 இலட்சம் கொண்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் மீள ஒப்படைக்கப்பட்டமைக்கும் சீராக்கம் செய்யப்பட்டவிடத்து இம் மூலத்திலிருந்து ரூ.26,920 இலட்சம்கொண்ட தேறிய தொகையைப் பெறக்கூடிய

## பொதுப்படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

* கடன்கழைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்தப்படுகடன்
1980 ஆண்டு எண்தொகைகள் தற்காலிகமானவை.

தாக இருந்தது, 1980 இல் ரூபாக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் மூலமும், இடைத்தர முறிகளை அறிமுகம் செய்ததன் மூலமும் முதிர்ச்சி அடையும் காலத்தை 10 – 12 ஆண்டுகளிலிருந்து 3 ஆண்டிற்குக் குறைத்ததன் மூலமும் மூலவளங்களை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் உதவு தொகைகளை அதிகரிப்பதற்குப் போதிய ஊக்குவிப்பாக அமையவில்லை. ரூபாக் கடன்களுக்கான உதவு தொகைகள் அரசின் செல்வாக்குக்குட்பட்ட மூலங்களிலிருந்தே கிடைத்தன. மறுபுறம் வங்கித்துறைக்கு ரூ. 250 இலட்சம் மீளச் செலுத்தப்பட்டது.

சந்தையல்லாக் கடன்பாடுகளின் கீழ் முன்னைய ஆண்டின் செலவினை ஈடு செய்வதற்கு ரூ. 8,840 இலட்சம் கொண்ட நடைமுறை மூலவளங்கள் பயன்படுத்தப்பட்டன. வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகளின் கீழ் ரூ 70 இலட்சம் கடனாகப் பெறப்பட்ட அதேவேளை திறைசேரி வைப்புக்களிலிருந்து ரூ. 5,920 இலட்சம் எடுப்பனவு செய்யப்பட்டதுடன் நிருவாகக் கடன்பாடுகளின் கீழ் ரூ. 2,990 இலட்சம் திரும்பச் செலுத்தப்பட்டது. முன்னைய நிதி ஆண்டின் இறுதியில் வரவு செலவுத்திட்ட ஒதுக்கிலிருந்து வைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட தொகைச் செலவினை ஈடு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டமையை வைப்புக்களின் எடுப்பனவுகள் உள்ளடக்கியிருந்தன.

வங்கி மூலங்களிலிருந்து கிடைத்த உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகள், திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலம் பெறப்பட்ட ரூ. 70,770 இலட்சத்தையும் மத்திய வங்கி முற்பணங்களின் கீழ் பெறப்பட்ட ரூ. 1,830 இலட்சத்தையும் உள்ளடக்கும். திறைசேரி உண்டியல்கள் மூலம் நிதியைப் பெறும் பொருட்டுச் சட்ட அடிப்படையிலான ஒப்புதல் எல்லை ரூ. 30,000 இலட்சத்திலிருந்து ரூ. 100,000 இலட்சத்திற்கு 4 தடவைகள் உயர்த்தப்பட்டது. மொத்த வங்கி நிதியிடலில் மத்திய வங்கியின் மொத்த உதவு தொகை ரூ. 71,310 இலட்சமாக அமைந்தது. வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி உண்டியல்களும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களும் முறையே ரூ. 420 இலட்சத்தினாலும் ரூ. 120 இலட்சத்தினாலும் வீழ்ச்சியுற்றன. காசு நிலுவைகளின் பயன்பாடு இணைக்கிளை நிதியத்திலிருந்து எடுப்பனவு செய்த ரூ. 1180 இலட்சத்தையும் காசின் எடுப்பனவான ரூ. 150 இலட்சத்தையும் கொண்டிருந்தது.

**பொதுப்படுகடன்**

1980 முடிவில் வெளிநின்ற மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 5,16,560 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 46 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1980இல் உள்நாட்டுப் படுகடன் 50 சதவீதத்தினால் அதிகரிக்க வெளிநாட்டுப் படுகடன் 41 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி மொத்தப் பொதுப்படுகடனில் வெளிநாட்டுக் கடன்களின் விகிதம் 45 சதவீதத்திலிருந்து 43 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1980இன் முடிவில் மொத்த உள்நாட்டு கடனும் வெளிநாட்டு கடனும் முறையே ரூ. 293790 இலட்சமாகவும், ரூ. 222,770 இலட்சமாகவும் விளங்கின. இதன் விளைவாக மொ. தே. உ. இல் பொதுப்படுகடனின் விகிதம் 1979 இன் 72 சதவீதத்திலிருந்து. 1980 இல் 84 சதவீதமாக அதிகரித்தது. பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 16,330 இலட்சத்திலிருந்து 1980 இல் ரூ. 22,000 இலட்சமாக அதிகரித்தது. இவ்வாறாக மொ. தே. உவில் பொதுப்படுகடன் மீதான வட்டிக்கொடுப்பனவின் விகிதம் 3.3 சதவதத்திலிருந்து 3.7 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. கடன் தீர்ப்பனவுக்கொடுப்பனவுகள் உட்பட மொத்

தக் கடன் பணிக்கொடுப்பனவுகள் ரூ. 37,020 இலட்சமாக அமைந்தன. அர சிறையில் படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் பங்கு 1979இன் 23 சதவீதத்திற் மாறாக 1980இல் 27 சதவீதத்திற்கு அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன் பணி விகிதம் 1979இன் 13 சதவீதத்திலிருந்து 1980 இல் 12.4 சதவீதமாகவீழ்ச் சியுற்ற வேளையில் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் சேவைக் கொடுப்பனவு களின் விகிதாசாரம் 1979இல் 4.7 சதவீதத்திலிருந்து 1980 இல் 4.5 சதவீத மாகச்சிறிதளவு வீழ்ச்சியுற்றது.

மொத்த உள்நாட்டுப் பொதுப்படுகடன் ரூ. 2,93,790 இலட்சமாகஅமைந்து ரூ. 97,450 இலட்ச அதிகரிப்பைக் காட்டியது. நிதியிடப்பட்ட படுகடன் (நீண்ட கால, நடுத்தரக் கடன்) ரூ. 24,700 இலட்சத்தால் அதிகரித்து 1980 இல் ரூ. 179,390 இலட்சமாக விளங்க, மிதக்கும் கடன் (திறைசேரி உண்டியல், மத் திய வங்கி முற்பணங்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் போன்றவை) ரூ.72,760 இலட்சத்தால் அதிகரித்து 1980 இல் ரூ. 1,14,400 இலட்சமாக விளங்கியது. மிதக்கும் கடனில் ஏற்பட்ட இந்த மூன்று மடங்கு அதிகரிப்புக் காரணமாக மொத்த உள்நாட்டுப் படுகடனில் நிதியிடப்பட்ட படுகடனின் பங்கு 1979 இன் 79 சதவீதத்திலிருந்து 1980 இல் 61 சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்தது. மிதக் கும் கடனின் பங்கு 21 சதவீதத்திலிருந்து 39 சதவீதத்திற்கு அதிகரித்தது.

ரூபாப் பிணைகளின் வாயிலாக பெறப்பட்ட மொத்த மூலவளங்கள் 1979 இன் ரூ. 29,500 இலட்சத்திற்குமாறாக 1980இல் ரூ. 28,020 இலட்சமாக அமைந் தது. இதில் ரூ. 16,000 இலட்சம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் திரட்டப் பட்டது. இக்கடன்கள் ஆண்டுக்கு 10 சதவீத வட்டி வீதத்தையும் 10-12 ஆண்டு முதிர்ச்சிக்காலத்தையும் கொண்டிருந்தன. 1980 யூலையில் இம் முறிகளின் முதிர்ச்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு வட்டி வீதமும் ஆண் டுக்குப் 16 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ஆண்டின் இரண்டாவது அரைப்பகு தியில் நடுத்தரக் காலக் கடன்களின் கீழ் ரூ. 12,020 இலட்சம் பெறப்பட்டது. கடந்த காலத்தைப் போன்று முக்கிய உதவுநர்களாக விளங்கிய ஊழியர் சேம நிதியம் (ஊசேநி), கடன் கரைப்பு நிதியம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி (தேசேவ) என்பன விளங்கின. கடன் கரைப்பு நிதியங்களினதும் ஊசேநிதியத்தினதும் உதவு தொகைகள் முறையே 6 சதவீத, 8 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் தே. சே. வங்கி, காப்புறுதி கூட்டுத்தாபனம் எஸ்பவற்றின் உதவு தொகைகள் முறையே 18 சத வீதத்தாலும் 25 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உண்மையானநியதிகளில் நோக்குமிடத்து கடன் திட்டத்திற்கு தே. சே. வ. உதவிய தொகையில் ஏற் பட்ட வீழ்ச்சி ரூ. 2,110 இலட்சமாகும். தே. சே. வ. தொடர்ந்தும் ரூபாக் கடன்களுக்கான முக்கிய உதவுநராக விளங்கி மொத்த உதவுதொகையில் 33 சதவீதத்திற்கு வகைகூறியது.

1980 திசெம்பர் இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் மொத்தத் தொகை ரூ. 98,000 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ரூ. 68,000 இலட்சம் அதிகரிப்பைப் பதிவுசெய்தது. வங்கித்துறைகள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் ரூ. 27,060 இலட்சத்திலிருந்து ரூ. 96,130 இலட்சத் திற்கு அதிகரிக்க மத்தியவங்கியின் உடைமைகள் ரூ. 26,560 இலட்சத்திலிருந்து ரூ. 96,050 இலட்சத்திற்கு பெரும்பாலும் நான்கு மடங்கு அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் வர்த்தக வங்கிகளின் உடைமைகள் ரூ. 500 இலட்சத்திலிருந்து ரூ. 80 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. வங்கியல்லாத் துறையின் உடைமை

## உள்நாட்டுக் கடனின் அமைப்பு




இலங்கை மத்திய வங்கி

* கடன்கரைப்பு நிதியம் தவிர்ந்த மொத்தப்படுகடன்.
1979 எண்தொகைகள் தற்காலிகமானவை

## வெளிநாட்டுக் கடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

1980 ஆம் ஆண்டின் எண் தொகைகள் தற்காலிகமானவை,

கள் ரூ. 2,940 இலட்சத்திலிருந்து ரூ. 1,870 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. ஊ. சே. நி. தனது உடைமைகளை ரூ. 170 இலட்சத்தினால் குறைத்துக்கொண்ட வேளையில் தே. சே. வ. அதனது திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீட்டில் ரூ. 990 இலட்சத்தைத் திருப்பிப் பெற்றது.

நாணயச் சட்ட விதியின் 89 ஆம் பிரிவின் கீழ் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் 1979 இன் ரூ. 1,810 இலட்சத்திற்கு எதிராக ரூ. 1,830 இலட்சத்தினால் அதிகரித்தன. ஆண்டின் இறுதியில் தற்காலிக முற்பணங்கள்மீதான மொத்த வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 13,190 இலட்சமாக அமைந்தன. பன்னாட்டு நிறுவனங்களுக்கான உதவுதொகையைச் செலுத்துவதற்காக 1980 இலிருந்து மத்திய வங்கி அரசிற்கு மீண்டும் சிறப்புக் கடன்களை வழங்கியது. இது, ரூ. 3,080 இலட்சமாக அமைந்தது. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ரூ. 130 இலட்சமாக அமைந்து ரூ. 150 இலட்சங்கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

1980 இறுதியில் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுக் கடன் ரூ. 222,770 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 64,360 இலட்சம் அல்லது 41சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்தமையால் வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 29,210 இலட்சத்தினால் அதிகரித்தன. சென்மதியாளரினால் இடப்பட்ட தொகை 1979 இன் ரூ. 8,040 இலட்சத்திற்கெதிராக ரூ. 20 இலட்சமாக மட்டும் அமைந்தது. செயற்றிட்ட, பண்ட,காசுக் கடன்களின் வடிவில் வெளிநாட்டுதவியாகப் பெறப்பட்ட தேறிய வரவுகள் ரூ.35,160 இலட்சமாகும். இவ்வாண்டில் வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவு ரூ. 6,000 இலட்சமாகும். இதில் ரூ. 3,520 இலட்சம் (59 சதவீதம்) பண்டக் கடன்களுக்கும், ரூ. 1,550 இலட்சம் (26 சதவீதம்), செயற்றிட்டக் கடன்களுக்கும், மீதி ரூ. 930 இலட்சம் (15 சதவீதம்) காசுக் கடனுக்கும் கருவிகளுக்கான கடன்களுக்குமாகும்

பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 21,990 இலட்சமாக[1] அமைந்து ரூ.5,660 இலட்சம் அல்லது 35 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. உள்நாட்டுக்கடன் மீதான வட்டி ரூ. 5,100 இலட்சத்தினால் அல்லது 40 சதவீதத்தால் அதிகரிக்க வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி ரூ. 560 இலட்சத்தால் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்தது. உள்நாட்டுக் கடன் மீதான வட்டி ரூ. 17,870 இலட்சமாக அமைந்தது. இது ரூபாக் கடன்கள் மீதான ரூ. 13,300 இலட்சத்தையும் திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 4,410 இலட்சத்தையும், வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் மீதான ரூ. 150 இலட்சத்தையும், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் மீதான ரூ. 10 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

ஆய்வுக்குரிய ஆண்டில் அரசு 26 செயற்றிட்டக் கடன்களுக்கும், 7 பண்டக் கடன்களுக்கும் காசுக் கடனுக்கும் ஒப்பந்தம் செய்துகொண்டது. இக்கடன்களின் பெறுமதி 1979 இன் ரூ. 64, 570 இலட்சத்திற்கெதிராக ரூ. 87,140 இலட்சமாக அமைந்தது. எனினும் மொத்தப் பயன்பாடு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 1980 முடிவில் உள்ளபடி 1970 தொடக்கம் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட கடன்களின் மொத்தப்பயன்பாடு 56 சதவீதமாக அமைந்தது. 1979இல் இவ்விகிதம் 60 சதவீதமாக அமைந்து, மிகக் குறைந்த மட்ட பயன்பாட்டினை செயற்றிட்டக் கடன்களில் கவனிக்கத்தக்கதாயுள்ளது. இதில் பயன்பாட்டு வீதம் 36 சதவீதம் கொண்ட குறைந்த அளவாகும். பண்டக் கடன்கள் 81 சதவீதமான பயன்பாட்டு வீதத்தைப் பதிவு செய்தன. காசுக் கடன்கள் முற்றாகப் பயன்படுத்தப்பட்டன.

---

1. இது திறைசேரியால் தீர்க்கப்பட்ட தற்காலிக ரூபாக் கடன்கள், குறுங்கால வெளிநாட்டுக் கடன்கள் என்பன மீதான வட்டிக்கொடுப்பனவுகளைத் தவிர.